1981 ஏப்ரல் 31

தமிழ்நாட்டில் கருப்புக்கல் கிடைக்குமிடங்கள்

*வினா எண் 624—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கருப்புக்கல் உள்ள இடங்களில் அரசு எடுத்துக்கொண்ட இடம் எத்தனை ?

(ஆ) ஆம் எனில், எடுத்துக்கொண்ட இடங்கள் எவை ?

(இ) இன்னும் எடுக்கப்படாத இடங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (அ), (ஆ) மற்றும் (இ) விடைகள் அடங்கிய * விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம் ; பேரவைத் தலைவரவர்களே, அரசுக்கு தேவைப்படாமலும், அரசால் உபயோகப்படுத்தப்படாமலும் இருக்கின்ற கருப்புக்கல் உள்ள இடங்களை அரசுக்கு வருவாய் வருகின்ற இடங்களை மட்டும் வைத்துக்கொண்டு மீதி இடங்களைத் தனியாருக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப் போன்ற எண்ணம் அரசினிடத்திலே இல்லை.

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறுப்புக்கல்லை தமிழகத்திலே இருந்து ஏற்றுமதி செய்வதற்கு தடை இருக்கின்றதா ? ஆனால் ஆந்திரா மூலமாகவும், கர்நாடகா மூலமாகவும், கேரளா மூலமாகவும் இங்குள்ள கற்களை எடுத்துச் சென்று ஏற்றுமதி செய்கிறார்களே, இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, கறுப்புக்கல்லை ஏற்றுமதி செய்வதற்குத் தடையே இல்லை.

சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு துவக்கப்படும் சிறுதொழில் நிறுவனங்கள்.

*வினா எண் 625—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

---

* 681 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

(அ) சிமெண்ட்டை மூலப்பொருளாகக் கொண்டு (சிமெண்ட் குழாய், ஆஸ்பெஸ்டாஸ் குழாய்) புதிதாக துவக்கப்படும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிமெண்ட் ஒதுக்கீடு தரக்கூடாது என அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிதாக துவக்கப்படும் சிமெண்ட்டைப் சிறு தொழில் வளர்ச்சியை உத்தேசித்து இந்த கட்டுப்பாடு தளர்த்தப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இடமே இல்லை என்று கூறினார்கள். தமிழகத்தில்தான் அதிகமான அளவு சிமெண்ட் உற்பத்தி செய்யப்படுவதாலும், படித்த பட்டதாரி மாணவர்கள் அதிகமாக இருப்பதாலும் அவர்கள் இதைப்போன்ற புதுத் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அவர்களுக்கு விதிவிலக்கு தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே சிமெண்ட் பொருட்கள் தயாரிக்கின்ற சிறு சிறு நிறுவனங்களுக்கு நாம் இப்போது 13,600 மெட்ரிக் டன்கள் சிமெண்ட் ஒதுக்கி அவர்களுக்கு அனுமதியும் கொடுத்திருக்கின்றோம். மத்திய அரசினிடத்திலே இருந்து முந்தைய காலாண்டுக்கு கொடுத்தது 3,95,400 மெட்ரிக் டன் இந்த காலாண்டுக்கு நமக்குக் கொடுத்திருப்பது 25,000 மெட்ரிக் டன் ஆகவே இதிலிருந்து இப்போது சிமெண்டிற்காக பதிவு செய்திருக்கின்ற நிறுவனங்களுக்கு அவர்களுடைய தேவையில் 75 சதவீதத்தைத்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே புதிதாக இப்போது யாருக்கும் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. ஆறுமுகம் : தலைவரவர்களே, பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் எத்தனை இருக்கின்றன. ஆஸ்பெஸ்ட்டாசிட்டைப் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய சிறு தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சிறு நிறுவனங்கள் எத்தனை என்கின்ற விவரங்கள் என்னிடத்திலே தற்போது இல்லை. ஆனால் அவைகளுக்கு மொத்தம் ஒதுக்கி இருக்கின்ற சிமெண்ட் 13,600 மெட்ரிக் டன்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த சிமிண்ட் குழாய் போன்றவைகளைப் புதிதாக தயாரிக்க பெர்மிட் கொடுக்கப்பட மாட்டாது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் ஏற்கனவே இந்தத் தொழிலை செய்கின்றவர்கள், அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலேயும் தொழிலை விஸ்தரிக்கின்ற நிலையிலே உள்ளவர்களுக்கும் அதிகமான கோட்டா சிமிண்ட் ஒதுக்க மறுக்கப்படுகின்றது. அதேமாதிரி கட்டிடங்களுக்குத் தேவையான மொசைக் டைலஸ் போன்றவற்றைத் தயாரிக்கக் கூடியவர்களுக்கும் அனுமதி மறுக்கப்படுகிறது. இந்த நிலையினை அரசு அறியுமா? இந்த நிலையைப் போக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, சிறுசிறு அளவிலே இதைப்போன்ற சிமிண்ட் பொருட்கள் தயாரிக்கின்ற நிறுவனங்களின் தேவை 18 டன்னுக்கு குறைவாக இருந்தால் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்கலாம். ஆனால் பலர் இப்படி சிறு சிறு நிறுவனங்கள் என்று பதிவு செய்து வைத்துக்கொண்டு தனக்குரிய கோட்டா சிமிண்டை வாங்கி சிறு தொழில்களைச் செய்யாமல் அப்படியே விற்றுவிடுகின்ற நிலைமை இருக்கின்றது. இவற்றை எல்லாம் முழுமையாக ஆய்வு செய்துதான் 18 டன்னுக்கு குறைவாக சிமிண்ட் தேவைப்படுகின்ற நிறுவனங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அனுமதி வழங்குகிறார்கள்.

சிமெண்ட் பற்றாக்குறை.

*வினா எண் 626—திருவாளர்கள் ந. ரமணி, இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிமெண்ட் கிடைக்காத நெருக்கடி வளர்ந்துள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) கள்ளமார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில் இது பற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) கள்ள மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைத்து வருவது பற்றி அரசின் கவனத்திற்கு பொதுவாக அவ்வப்பொழுது கொண்டு வரப்படுகிறது.